**செய்தி வெளியீடு எண்: 56/2024** **நாள்: 31.07.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒருங்கிணைந்த நிலப்பரப்புகளின் மேம்பாட்டுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ரூ. 57.00 லட்சத்துக்கு கையெழுத்தானது**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2 வழித்தடம் 3 மற்றும் 5-ல் அமையவுள்ள மெட்ரோ இரயில் நிலைய நுழைவு/வெளியேறும் பகுதிகளில் ஒருங்கிணைந்த நிலப்பரப்புகளின் மேம்பாட்டுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் M/s SREI Infrastructure Finance நிறுவனத்திற்கு ரூ.57 லட்சம் மதிப்பில் கையெழுத்தானது. இதற்கான ஏற்பு கடிதம் (LOA) M/s SREI Infrastructure Finance நிறுவனத்திற்கு 18.06.2024 அன்று வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. மு.அ.சித்திக் இ.ஆ.ப., மற்றும் திட்ட இயக்குநர் திரு. தி. அர்ச்சுனன் முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் திரு. டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மற்றும் M/s SREI Infrastructure Finance நிறுவனத்தின் சார்பாக திரு.சுதீப்தா மித்ரா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், தலைமை பொது மேலாளர் திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் M/s SREI Infrastructure Finance நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணச்சீட்டு வருவாயுடன், கூடுதல் வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளது. பல மெட்ரோ இரயில் நிலையங்களில், வணிக இடங்களை உருவாக்கி வளர்ச்சிக்கு சாத்தியக்கூறுள்ள பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மாதவரம் பால்பண்ணை, வேணுகோபால் நகர், சாஸ்திரி நகர், ஸ்ரீனிவாச நகர் அயனாவரம், ஓட்டேரி, பெரம்பூர் பேரக்ஸ், புரசைவாக்கம், சேத்துப்பட்டு, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, ஆர்.கே. சாலை, திருமயிலை மற்றும் அடையார் பேருந்து பணிமனை ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களுக்காக எடுக்கப்பட்ட இடங்களில் வணிக வளர்ச்சி மேம்பாட்டுக்கான ஒப்பந்தம் இன்று வழங்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாற்று வருவாயை (மெட்ரோ இரயில் சேவை வருவாய் கட்டணம் அல்லாத) அதிகரிப்பதற்காக இது போன்ற பல விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**